# ஜாமக்காரன்
# JAMAKKARAN

VOLUME - 2 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 11
NOVEMBER 2018 TAMIL & MALAYALAM
ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=




*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com

ஜாமக்காரன் JAMAKKARAN



**கர்த்தருக்குள் அன்பானவர்களே,**

உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக.

கர்த்தரின் வருகைக்கான அடையாளங்கள் யாவும் ஏறக்குறைய நடந்துமுடியும் தருவாயில் இருக்கிறது. நம்மை சுற்றியும் காணப்படும் **அக்கிரமங்கள், கொலைகள், அநியாயங்கள்** யாவும் நாளுக்குநாள் அதிமாகிக்கொண்டே போகின்றன. விக்கிரங்களை ஆராதிக்கும் மக்களிடையே ஒரே வீட்டில் இரத்த உறவுள்ள பெற்றோர்-பிள்ளைகளை கொல்வதும், பிள்ளைகளையும், பெற்றவர்களையும், சகோதரர்களையும் கொல்வதும் இந்தியா முழுவதும் நடக்கும் தினசரி சம்பவமாக செய்தித்தாள்களில் வாசிக்கிறோம்.

ஆனால் இப்போது கிறிஸ்தவர்கள்,கிறிஸ்தவ ஆயர்கள்,பிஷப்மார்கள், பாஸ்டர்கள் இவர்களுக்குள்ளேயே நடக்கும் கொலைகளைப்பற்றிய விவரங்களை அறியும்போது **கேட்க** கூசுகிறது. **கிறிஸ்தவ சபைகளில் பரித்தம் இல்லை, ஊழல் பெருகிப்போனது, தெய்வபயம்இல்லை,** கிறிஸ்தவ சபைகளில் அங்கு செல்லும் மக்களுக்கு பிள்ளைகளுக்கு ஆத்துமாவுக்கு ஆகாரம் எதுவும் கிடைப்பதில்லை. மக்கள் தங்கள் மரணத்துக்கும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் எப்படி ஆயத்தமாவார்கள்?.

## பெங்களூர் போலி ஊழியர் பாஸ்டர்.பால் தங்கையா:

**ஐந்துவிரல் மோதிரம்**,கழுத்திலே தங்க வடகயிறு செயின், கையிலே தங்க பிரேஸ்லெட் அணிந்து டிவியில் காட்சி தரும் பாஸ்டர் நடத்தும் **அசம்பளீஸ் ஆப் காட்** சபைக்குவரும் கூட்டமோ ஏராளம். பெரிய பெரிய பட்டதாரிகள்,படித்தவர்கள் ஆனால் சிந்திக்கும் திறனற்ற முட்டாள்கள்தான் அந்த சபையில் நிறைந்து வழிகிறார்கள் என்றுதான் கூற தோன்றுகிறது. தங்கள் மேய்ப்பனைப்பற்றியும்,அவரின்,அவருடைய மனைவியின் சாட்சியில்லா வாழ்க்கையை கண்டும்,அறிந்தும் தொடர்ந்து அதே சபைக்கு எதற்காக செல்கின்றனர். மேய்ப்பனின் வாழ்க்கையிலிருந்து சபை மக்கள் என்ன கற்றுக்கொண்டார்கள்?

இவர் தன் சபை மக்கள் உயிற்மீட்சிபெற கடந்த நாட்களில் ஒரு விசேஷ செய்தியாளரை அழைத்து கூட்டம் நடத்தினார். அவருடைய பெயர்.**இப்ராஹீம்** இஸ்லாம் மதத்திலிருந்து இயேசுவை ஏற்றுக்கொண்டவராம். அற்புத அடையாளங்கள் ஏராளம் செய்கிறார். இதனால் சபையில் கூட்டம் நிரம்பி வழிந்தது. சபை மண்டபம் நிறைந்து மெத்தை படிக்கட்டுகளிலெல்லாம் ஆட்கள் நிறைந்து வீதியில் போக்குவரத்து ஸ்தம்பித்துபோகும்அளவு ஆள் கூட்டம். கூட்டத்தின் காரணம் ஒரு லிட்டர் **தண்ணீரை திரட்சை ரசமாக மாற்றும் அற்புத காட்சி** அங்கு நடந்தது. ஆனால் தண்ணீர் நிறம் மாறவில்லை. குடித்தால் **திராட்ச ரசத்தின் மனமும்,ருசியும்** உணரமுடிகிறது. சபையில் உள்ளவர் போட்டி போட்டு வாங்கி குடித்தனர். **பாஸ்டர்.பால்தங்கையா வும்** குடித்து எல்லாரும் **பிரைஸ்த லார்ட்,ஆமென்** என்று பாஸ்டர் உட்பட கத்தினார்கள். அடுத்தது ஆராதனைக்கு வந்த அவரவருடைய பாக்கெட்டில் ரூபாய் வரவழைத்தார். **அல்லேலுயா** என்று சத்தமிட்டவுடன் பாக்கெட்டை பார்க்க சொன்னார். பெரும்பாலோரின் பாக்கெட்டில் ரூபாய் காணப்பட்டது. மக்களின் ஆர்ப்பரிப்பு அந்த இடமே அதிர்ந்தது. இப்போது அடுத்தது **இயேசு உங்கள் ஒவ்வொருவருடைய பேங்க் அக்கவுண்ட்டிலும் பணம் தானாக உங்கள் கணக்கின்** வரவில் பதிவாகிவிட்டது. அதை வாட்ஸ் அப் உள்ளவர் உங்கள் வங்கி அக்கவுண்டை ஒப்பன் செய்து பாருங்கள் என்றார். பெருத்த நிசப்தம். அவரவர்கள் உடனே **பரிசோதனை செய்து பார்த்தவுடன்** விவரிக்கமுடியாத ஆச்சரியம். கணக்கிலே பணம் வரவு வந்துள்ளது என்று கூறி ஆர்ப்பரித்தார்கள். இதிலும் மேலாக கர்த்தர் அற்புதத்தை செய்வார் என்றார். **பாஸ்டர். பால்தங்கையா** அவர்கள் **பாஸ்டர்.இப்ராஹீமை** கட்டிப்பிடித்து எல்லாரும் கை உயர்த்தி **அல்லேலுயா** கூறுவோம், **ஆமென்** கூறுவோம் என்றார். அவ்வளவுதான் சபை மக்கள் கத்தின சத்தம் கட்டிடத்தை அதிர வைத்ததாம். இது என்ன சித்துவேலை- இது வெறும் **கண்கட்டி மாந்திரீகம்-குட்டிசாத்தான் வேலை** இதுகூட விளங்கிக்கொள்ளாத அந்த **அசம்பளீஸ் ஆப் காட்** சபைமக்கள் அன்று பாஸ்டர் பால்தங்கையாவுடன் போட்ட கூத்து பெருமைப்படக்கூடியது அல்ல. வெட்கடேனானது. இதிலிருந்து பாஸ்டரின் **அந்நியபாஷை பச்சை பொய்** என்றும், அவர் சபைமக்கள் பேசிய **அந்நிய பாஷையும்-பரிசுத்தாவியின் நிறைவும் பொய்யானது** என்று விளங்கவில்லை?. அன்று **கானா** ஊர் கல்யாணத்தில் திராட்ச ரசம் குறைவுபட்டதாலும், கடைசி பந்தியில்உள்ள வேலைக்காரரும்,அடிமைகளும் **விலைஉயர்ந்த திராட்ச ரசத்தை ருசிக்கவே இயேசு** அந்த அற்புதத்தை செய்தார் என்பதை நாம் அறிவோம். ஆனால் இந்த தற்காலிக அதியசம் எதற்கு?. பாஸ்டர்.பால்தங்கையா அவர்களின் சபை கல்யாண மண்டபமா? **தண்ணீர் திராட்ச ரசத்தின் கலராக** மாறாமல் திராட்சை ரசத்தின் மணமும்,ருசியும் மட்டும் உண்டானதாக கூறினார்களே, என்ன ஏமாற்றுத்தனம் இது கண்கட்டி வித்தையாக தோன்றவில்லையா?.

**சேலத்தில்** என் வீட்டின் அருகே ஒரு **முஸ்லீம் மந்திரவாதி வாலிபன்** இருந்தான். அவனை பல இடங்களுக்கு **பில்லிசூனியம் வைக்கவும், மந்திரிக்கவும்,பேய் ஓட்டவும் அவனை** அழைத்துப்போக ஆட்கள் வருவார்கள். அந்த ஆட்களும் தன் குடும்பத்தினரையும் நம்ப வைக்க அவன் ஒரு தாம்பாள் தட்டில் தண்ணீர் ஊற்றி மந்திரம் சொல்வான். அதிலே வெள்ளை பேப்பர் துண்டுகளை போடுவான். பேப்பர் மிதக்கும் அதை எடுத்து ஒவ்வொருவர் கையிலும் ஈரத்தோடு கொடுப்பான். அத்தனையும் **20 ரூபாய் நோட்டும்,100 ரூபாய் நோட்டுமாக** ஈரத்தோடு காணப்படும். அதை கண்ட ஆட்கள் அவன் கேட்ட பணத்தை முன்பணமாக கொடுத்து அவனை அழைத்துபோவார்கள். அந்த ரூபாய் எத்தனை மணிநேரம் ரூபாய் தோற்றத்தில் இருக்கும் என்று தெரியாது. அதைப்போலவே இந்த பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர் ஒருவர் மந்திரவாதி போல் அந்நியபாஷையை மந்திரம்போல கூறி ஜனங்களின் **மணிபர்சில் பணம்** வரவழைப்பதும், வங்கி

கணக்கில் **பணம் வரவு** வந்ததை கண்கூடாக பார்க்க வைப்பதும் **நூற்றுக்கு நூறு பிசாசின் மந்திர வேலையல்லவா?** வங்கிக்கு சென்று பரிசோதித்து பார்த்தால் பாஸ்டரின் வண்டவாளம் விளங்கும். கள்ள ரூபாய் நோட்டு அச்சடிப்பு வழக்கில் அந்த பாஸ்டரை கைதுசெய்து போலீஸ் பிடித்துக்கொண்டுபோவார்களே!. பாஸ்டர்.பால்தங்கையாவுக்கு இது வெறும் மாந்திரீகம் என்றும், ஸ்டேஜ் மேஜிக் என்றும் அவரால் விளங்கிக்கொள்ள முடியவில்லையா?.இதை உணர்ந்த பெங்களூரில் உள்ள **பால்தங்கையா** சபை அங்கத்தினர்கள் ஏமாற்றுதனத்தை விளங்கிக்கொள்ள முடியாதஅளவு மூளை மழுங்கிவிட்டதா?.

இதை வாசிக்கும் அந்த சபையிலுள்ள என் பத்திரிக்கை வாசகர்கள் நான் எழுதிய இந்த பகுதியை போட்டோ காப்பி எடுத்து உங்கள் சபை விசுவாசிகளுக்கு விநியோகம் செய்து சபை மக்களை சீக்கிரம் அந்த மந்திரவாத அசம்பளீஸ் ஆப் காட் சபையிலிருந்து வெளிவர சொல்லுங்கள். **ஏஞ்சல் டிவி** எல்லாரையும் குறிப்பாக வயிற்றிலுள்ள **குழந்தைகளையும் தீர்க்கதரிசிகளாக** மாற்றுவதாக கூறும் பிசாசின் கிரியையைப்போல - உங்கள் சபை பாஸ்டர், இப்படிப்பட்ட மந்திரவாதி ஊழியர்களை அறிமுகப்படுத்தி பாஸ்டரும், சபைமக்களும் மந்திரவாதிகளாக மாறுவதற்க்குள் உண்மையான விசுவாசிகள் சபையைவிட்டு வெளிவந்துவிடுங்கள். இதுவரை பெந்தேகோஸ்தே சபைகளில் **அந்நியபாஷை-அபிஷேகம்-அக்கினி** என்ற பிசாசின் பொய்யான கிரியைகளை மறைமுகமாக செயலாக்கிகொண்டிருந்தான். ஆனால் இப்போதோ மிகவும் பகிரங்கமாக **பிசாசின் மந்திரவாதகிரியைகளை** சபையிலேயே காண்பித்து சபைமக்களை மந்திரவாதிகளாக மாற்ற துணிந்துவிட்டான். தங்களைத்தாங்களே **ஆவிக்குரிய சபைகள் என்று போலிதனமாக கூறும் சபைகளில்** உள்ள மக்களை பிசாசு எப்படி வஞ்சிக்கிறான் பார்த்தீர்களா?.

❖ முன்பு **ஜெபராஜ்** என்றவன் பாடல்பாடி டான்ஸ் ஆடி வாலிப பிள்ளைகளை கெடுத்து கொண்டிருந்தான் என்பதற்காகதானே சென்னை **அசம்பளிஸ் ஆப் காட் சபை பாஸ்டர்.மோகன்** அவர்கள் **ஜெபராஜின்** பாடல்களை பாட்டு புத்தகத்திலிருந்து கிழித்து எரிந்துவிட அறிவிப்பு கொடுத்தாரே, மற்ற பெந்தேகோஸ்தே சபையினரும் இப்போது **ஜெபராஜின்** பாடலை சபைகளில் பாடுவதை நிறுத்திவிட்டனர். அதைவிட பயங்கரமான செயல் அல்லவா?இது. **பாஸ்டர்.பால் தங்கையா,** தன் சபையில் அந்த **மந்திரவாதி பாஸ்டரை** அறிமுகப்படுத்தியது. அதன்மூலம் இப்படிப்பட்ட சம்பவங்களை கேள்விப்படும்போது தலை சுற்றுகிறது. பாவம் அந்த சபைமக்கள் சத்திய ஆராதனைக்கு அந்த சபையைவிட்டு எங்குதான் போவார்கள்? இப்படிப்பட்ட போலியான கவர்ச்சியுள்ள பரவச உபதேசத்தில் மூழ்கிப்போனவர்களுக்கு நான் சரியான உபதேசத்தையும், சரியான சபையையும் அறிமுகப்படுத்தினாலும் இவர்கள் விரும்பமாட்டார்கள்.

பாஸ்டர்.பால்தங்கையா இயற்றின பாடலான **உயிரோடு எழுந்தவரே** என்ற பாடல் எல்லா சபையிலும் பாடப்படுகிறது. ஆனால் இப்படிப்பட்ட மந்திரவாத உபதேசத்தை அறிமுகப்படுத்தின இவரின் **பாடலை ஏன் சபைமக்கள் பாடக்கூடாது?** என்று அறிவிப்பு கொடுக்ககூடாது!. ஜெபராஜ் பாடலுக்கு மட்டும் தடையை அறிவித்தவர்கள் **பாஸ்டர்.பால்தங்கையாவின்** பாடலையும் தடை செய்யவேண்டும் அல்லவா?. பரலோகத்தில் பிசாசு **பாட்டின் தலைவனாக** இருந்தவன் தானே? அதனால் அவன் இப்போது பாடல்மூலமாக வாலிப பிள்ளைகளை, சபைமக்களை கெடுத்துக்கொண்டிருக்கிறான். ஜாக்கிறதை!. இது கடைசி காலம். பிசாசுக்கு எதிர்த்து நிற்பது மட்டுமல்ல, **சில இடங்களில் பிசாசு உபதேசம்** உள்ள இடத்திலிருந்து எழுந்து ஒடிபோய் தங்களையும், நம் பிள்ளைகளையும் காப்பாற்றவும் வேண்டும்.

வாசக குடும்பங்களுக்காகவும், பிள்ளைகளுக்காகவும் தொடர்ந்து நான் ஜெபிக்கிறேன். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென். **கர்த்தரின் பணியில் - டாக்டர்.புஷ்பராஜ்**

# வேறே படகுகள்:



**Dr.Mrs.லில்லியன் ஸ்டான்லி**

**"வேறே படகுகளும் அவரோடேகூட இருந்தன"** மாற் 4:36. புயலடித்தபோது இந்த வேறே படகுகள் என்ன ஆயின? மாற்கு வெறுமனே, வேறே படகுகளும் இருந்தன என்று சொல்லவில்லை. அவரோடேகூட என்ற வார்த்தையைச் சேர்க்கிறார். ஆகவே அவர்கள் ஒரு குழுவாகப் பயணித்தனர் எனப் புரிந்துக்கொள்ளுகிறோம். வேறே படகுகளில் இருந்தவர்கள் யார்? நிச்சயமாய் கூட்டத்தினரல்ல. அவர்களைத்தான் அனுப்பிவிட்டனரே(மாற் 4:36). அவர்கள் படகில் ஏறு முன்பாக கடற்கரையில் நடந்ததைக் கவனிப்போம்.

**இயேசுவும், சீடர்களும்** சுகமளிக்கும் கூட்டத்தை முடித்துவிட்டு ஏரிக்கரைக்கு நடந்தனர். வழியில் மூவர் அவரைச் சந்தித்து அவரது ஊழியக்குழுவில் இணைந்துக்கொள்ள விருப்பம் தெரிவித்தனர். இம்மூவரையும் பார்க்கலாமா? (மத் 8:16-18).

வேதபாரகன் அல்லது மறைநூல் அறிஞன் ஒருவன் இயேசுவிடம் வந்து "போதகரே நீர் எங்கே போனாலும் உம்மைப்பின்பற்றி வருவேன்" என்றான்.வச 19. இந்த போதகன் இயேசுவைத்தன் போதகரென ஒத்துக்கொண்டான். அதிகபட்சமான மறைநூல் அறிஞர்கள் இயேசுவின் போதனைக்குறித்து கடுப்பாயிருந்ததோடு அவரைக் கொல்லவும் கைகொடுத்திருந்தனர். ஆனால் இவனோ வேறுபட்டவனாய் இயேசுவைத் தன் தலைவராக ஏற்றுக்கொண்டிருந்தான். இயேசு அவனை தன் குழுவில் சேர்ந்துக்கொள்ள அழைப்பு விடுக்கவில்லை. ஆனால் அவன் தன்னார்வமாய் அவர் **"எங்கே போனாலும்"** பின்பற்றுவேன் என்றான்(வச 18,19). அடுத்த வசனம் "வேறொரு சீடன்"என்று குறிப்பிடுவதால் இவனும் ஏற்கனவே சீடனாயிருந்தான் என்பதை கவனிக்கவும்.

இயேசு அவனை மாலைபோட்டு வரவேற்கவில்லை. **"நரிகளுக்குப்பதுங்குக்குழிகளும், வானத்துப் பறவைகளுக்கும் கூடுகளும் உண்டு. மானிட மகனுக்கோ தலைசாய்க்கக்கூட இடமில்லை"** என்றாரவர்.

இரண்டாமவன் **"ஆண்டவரே, முதலில் நான் போய் என் தந்தையை அடக்கம் செய்துவிட்டு வர அனுமதியும்"** என்றான். இவனும் ஒரு சீடன். தகப்பனது மரணத்திற்குப்பிறகு அவன் இயேசுவைப் பின்பற்றுவான் என்பதே அதன் கருத்து. ஆனால் இயேசு, "மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும், நீ என்னைப் பின்பற்றி வா" என்றார்.(வச 21,22). இயேசுவைப்பின்பற்றுவதை ஒத்திப்போட இவனுக்கு ஒரு சாக்குப்போக்கு இருந்தது. ஆனால் இயேசுவோ, அதை மற்றவர்கள் பார்த்துக்கொள்வார்கள் என்றார். அவனது தகப்பனும்,சகோதரும் ஆன்மீக மரணமடைந்தார்கள். ஆனால் இந்த சீடனோ உயிர்துடிப்புடன் இருப்பவன். அவன் இறையரசைப் பறைசாற்றிக்கொண்டிருக்கவேண்டும்.

மூன்றாமவன், "ஐயா, உம்மைப் பின்பற்றுவேன், ஆயினும் முதலில் நான் போய் என் வீட்டில் உள்ளவர்களிடம் விடைபெற்று வர அனுமதியும்" என்றான். இயேசு இவனை அழைக்கவில்லை. தன்னார்வ சமர்ப்பணம் இது. தன் குடும்பத்தை விட்டுவிட்டு வந்திருக்கிறான். இயேசுவைப் பின்பற்றுவதற்காக வீட்டைவிட்டு வெளியேறிய மணமாகாத வாலிபன்போலும். இயேசு "கலப்பையில் கைவைத்தபின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்படத் தகுதியுள்ளவர் அல்ல" என்றார்.(லூாக் 9:61,62).

இயேசு அறிவுறுத்தியதைக் கேட்டு இம்மூவரும் உணர்வடைந்து அவரைப் பின்பற்றித்தீர்மானித்தனர் என வைத்துக்கொள்வோம். இயேசுவை ஏற்கனவே பின்பற்றிக் கொண்டிருந்தவர்கள்தான். ஆனால் வழியில் தம் உள்ளுணர்வுகளை இயேசுவிடம் கொட்டிக் கொண்டிருந்தனர். படகில் ஏற ஆயத்தப்பட்டபோது தவிர்க்கமுடியாத சர்ச்சை- இயேசுவின் படகில் யார் செல்வது? ஏற்பட்டிருக்கும். தலைமை சீடர்கள் சர்ச்சையை அடக்கியபின் திறமையான படகோட்டிகளான பேதுரு,யாக்கோபு,யோவான் இயேசுவின் படகைப் பொறுப்பேற்றிருப்பார். இந்த மூவரும் வேறு படகுகளில் ஏறி இயேசுவோடு பயணித்திருப்பார் எனலாம்.

திடீரென்று பெரிய சுழல்காற்று ஏற்பட்டதால் அலையில் சிக்கிய தக்கைகள் போல படகுகள் தூக்கி வீசப்பட்டன. இயேசுவின் படகில் உள்ளவர்களைப்போலவே வேறே படகுகளில் இருந்தவர்களும் அலறியிருப்பர். இயேசுவுக்குக் கேட்குமா? அலையின் இறைச்சல் தங்கள் ஜெபங்களை மூழ்கடித்துவிடும் என்று நன்றாகவே அறிவர். **"இயேசுவின் படகில் இருந்தால் நான் அமிழமாட்டேனே"** என்று அனைவருமே எண்ணியிருப்பார்.

இயேசு தன் படகை மட்டும் காப்பாற்றவில்லை. அவர் புயலை அமர்த்தி எல்லாப் படகுகளையும் காப்பாற்றினார். ஒரு படகும் அமிழவில்லை. இயேசு அருகிலிருக்கிறார். எட்டி இருக்கிறார் என்பதெல்லாம் உணர்வுகள்தான். அன்று உடலளவில் அவர் தூர இருந்தார். இன்றோ, **"இம்மானுவேல், தேவன் நம்மோடிருக்கிறார்".**

எவ்விதம் இயேசு படகின் பிற்பகுதியில் தலையணை வைத்துக் தூங்கிக் கொண்டிருந்தார்(மாற் 4:38) என்று இயேசுவின் படகில் இருந்த சீடர் மற்றவர்களிடம் சொல்லியிருப்பார். தலைசாய்க்க இடமில்லை என்ற பதிலைப் பெற்றவன். இயேசுவைப் பின்பற்றினால் தன் வாழ்க்கை இப்படித்தான் இருக்கும் என்று புரிந்துக்கொண்டிருப்பான். சொகுசு தேடாமல் எல்லா சூழ்நிலையையும் சமாளிக்கவேண்டும். இயேசு போதனையினால் மட்டுமல்ல, அவனுக்குத் தன் கடின வாழ்வைக் காட்டினார்.

தகப்பனின் மரணத்திற்குப்பின் வர நினைத்த இரண்டாமவன் உணர்த்தப்பட்டிருப்பான். குடும்பத்தின் மூத்தமகனாகிய இயேசு, குடும்ப பொறுப்புகளைத் தன் சகோதரரிடம் ஒப்படைத்துவிட்டு, தயங்காமல் ஊழியத்தில் காலெடுத்து வைத்ததைக் கண்கூடாகக் கண்டான். குடும்பத் தலைவனாயிருந்தும் தன் உயிரைப் பணயம் வைத்து ஆபத்தான பயணங்களை மேற்கொண்டார்.

இயேசுவை ஒட்டிக்கொள்ளும் முன்பாக குடும்பத்திற்கு குட்பை சொல்ல விழைந்த மூன்றாமவன், நெருங்கிய சீடர் அவரை, "இருந்தபடியே" அழைத்துச் சென்றதைக் கண்டு அதிர்ந்திருப்பான்(மாற் 4:36). ஆயத்தமில்லை. தயாராகவில்லை. விடை பெறவுமில்லை. நேரத்தை வீணடிக்காமல் இறையரசைப் பறைச்சாற்றுவதன் அவசரத்தைப் புரிந்திருப்பான். கலப்பையின்மேல் கைவைத்துவிட்டு பின்திரும்பிப் பார்க்கும் யோசனையை அறவே கைவிட்டிருப்பான்."குடும்பத்திடம் விடைபெறச் சென்றிருப்பேனானால், எத்தனை அற்புதமான அனுபவத்தை இழந்திருப்பேன்" என எண்ணிப் பூரித்திருப்பான்.

மூவரும் தங்கள் பாடத்தைக் கற்றுக்கொண்டனர். நமது தலைவர் "போ" என்று மட்டும் கட்டளையிடுபவரல்ல. அவர் சென்றார். அனுப்பினார். **"என் பின்னே வாருங்கள்: நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்"** என்றார்(மத் 4:19). தலை சாய்க்க இடமற்றவரை, தன் தகப்பனின் வேலையைச் செய்யும்படியாக, மரித்தவரை மரித்தவர் அடக்கம் பண்ணும்படியாக விட்டுவிட்டவரை, இருந்தபடியே படகில் ஏறின வரை, கலப்பையில் கைவைத்துவிட்டு திரும்பியே பார்க்காதவரை தைரியமாகப் பின்பற்றுவோம்.

## வாசகர்கள் கவனிக்கவும்:

ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தேதியில் ஜாமக்காரன் பத்திரிக்கையை அனுப்ப இயலவில்லை. ஊழியம் அதிகமாக இருப்பதினாலும், மலையாள மொழியில் ஜாமக்காரன் பத்திரிக்கையை மொழிபெயர்ப்பதற்காக ஒவ்வொரு மாதமும் நான் கேரளா மாநிலத்துக்கு போய் வர வேண்டியிருப்பதால் ஜாமக்காரனை குறிப்பிட்ட தேதியில் அல்லது வாரத்தில் தபாலில் சேர்க்க முடியவில்லை. எனக்கு மலையாளம் எழுதவோ - படிக்கவோ தெரியாது. மலையாள மொழியில் பிரசங்கம் செய்ய மட்டும் கர்த்தர் எனக்கு கிருபை தந்தார்.

ஆகவே வாசகர்கள் இதை புரிந்துக்கொண்டு ஒவ்வொரு மாதமும், கடைசி வாரம் கடைசி தேதிக்குள் ஜாமக்காரன் உங்கள் விலாசத்துக்கு வந்து சேராவிட்டால் மட்டும் உங்களுக்கு ஜாமக்காரன் கிடைக்கவில்லை என்பதை எனக்கு அறிவிக்கலாம் அல்லது தொலைபேசியில் அறிவிக்கலாம். ஆகவே அந்தந்த மாதம் கடைசி வாரம்வரை கடைசி தேதி வரை பொருமையோடு இருந்து அதன்பிறகு என்னிடம் விசாரிக்கலாம்.

நீங்கள் அறிவிக்காமல் யாருடைய விலாசத்தையும் நாங்கள் நீக்கவேமாட்டோம். உங்களுக்கு அனுப்பப்படும் ஜாமக்காரன் தபால்துறையிலிருந்து எங்களுக்கு திரும்ப வந்தால்மட்டும் உங்கள் விலாசத்தை உடனே நீக்கிவிடுவோம். மறுபடியும் நீங்கள் எங்களுக்கு எழுதி கேட்டால் உங்கள் விலாசத்தை கம்பியூட்டரில் பதிவுசெய்து புதிய நெம்பர் உங்களுக்கு கொடுக்கப்படும். பழைய நெம்பர் கொடுக்கப்படாது. உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி.

**- ஜாமக்காரன்**



# WHY ARE MARRIAGES FAILING?

**- By. David Mcclain**

I had an uncle with a pain in his neck that caused him to constantly wince., Doctors couldnot diagnose the problem, so he lived with it for years. In time his neck began to permanently lean to the side. None of the treatments prescribed worked. About 25 years later he went to a dentist to remove a bad tooth and was immediately relived of all the pain. He suffered all those years unnecessarily due to a flawed diagnosis and treatment.

A wrong diagnosis can be costly and dangerous. I believe that every day we all witness a disastrous. dangerous misdiagnosis of mass proportions. Yet we continue full bore on the same path that got us into the mess that is the unravelling of marriage.

The diagnosis in our culture is that man is basically good,. but his self-esteem has been damaged by nagative influences. The problem with this diagnosis is that it is flat out wrong. I want to propose a different diagnosis and solution  to the problem by asking. “How does our sinful self obsession impact our marriages?”

Our self obsession causes us to hide the truth about ourselves and blame others for our flaws. This self-obsession becomes a curse that impact our marriages in painful, destructive ways. It causes ua to try to hide the truth about ourselves(Gen 3:9-11). When exposed we evade responsibility and blame others for our wrongs. We want to appear as righteous, yet, we are not so we blame. In this simple exchange we see why marriages are in trouble.

In their book Mistakes were made(But not by me). social psychologists carol tavris and Elliot aronson describe how a fixation on our own righteousness can choke the life out of love. They write,’ The vast majority of couples who drift apart do so slowly, over time, in a snow balling pattern of blame and self justification. Each partner focuses on what the other one is doing wrong while justifying his or her own prefercences, attutudes and ways of doing things. From our standpoint, therefore, misunderstandings, conflicts personality differcences and even angry auarrels are not the assassins of love, self justifications is”

Our sinful self obsession impacts our marriages by causing the proper God-given roles in life to be damaged(Gen 3:14-19). For man his curse is that he will face frustration in his work. For the woman, her role as man’s complement is impaired. When you put this to gether you can already see an unhealthy scenario.

What are some steps we can tanke to reduce the impact of our selfish impulses?. Confront your own self-centeredness - don't wait for the other person to act first.Accept responsibility for your sin - stop pretending to be the only victim and pass blame to others. Know that you will not find the perfect person. There will be some red flags for you to consider. Red flags alone are not the issue. it is your willingness to accept an imperfect person- just as they must accept you.

Understand that the painful vulnerability that healing a damaged relationship requires begins with self sacrifice like that of Jesus. It is a sacrifice that may require a very high cost. But like Jesus, it is in that sacrifice that we have hope for our greatest fulfilment.

Like my uncle who suffered from debiliatating pain for years due to a misdiagnosis. I belive our marriages and relationships suffer because we have accepted the wrong diagnosis. Our marriages are in major crisis because of it. What are some steps we can take to reduce the impact of our selfish impulses?.

# தூத்துக்குடி- நாசரேத் CSI டையோசிஸ்

# கோவில்பட்டி CSI கன்வென்ஷன்






கர்த்தருடைய கிருபையால் 9வது முறையாக **கோவில்பட்டி நகர்** கன்வென்ஷனில் கர்த்தரின் வசனத்தை பகிர்ந்துக்கொடுக்க **Rev.ஏசுஅடியான்** அவர்களால் அழைக்கப்பட்டேன்.

பொதுவாக கோவீல்பட்டி கிறிஸ்தவ மக்களுக்கு வசனத்தை கேட்கும் ஆவல் அதிகம் உண்டு. அதனால்தான் பிரசித்திபெற்ற **கெஸ்விக் கன்வென்ஷன்** என்ற பெயரில் வருடாவருடம் அனைத்து சபைகளும் சேர்ந்து கூட்டங்கள் ஏற்பாடு செய்து நானும் அழைக்கப்பட்டேன். இப்போது நடந்த CSI சபை கன்வென்ஷன் மிகுந்த ஆசீர்வாதமாக அமைந்தது. கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது.

# கர்த்தரின் கையெழுத்து

**சகோ.போல் குயிலி ராஜா(IBT)**

**"ஆ, நான் இப்பொழுது சொல்லும் வார்த்தைகள் எழுதப்பட்டால் நலமாய் இருக்கும். அவைகள் ஒரு புத்தகத்தில் வரையப்பட்டு அல்லது என்றைக்கும் நிலைக்க அவைகள் கருங்கல்லிலே உளி வெட்டாகவும் ஈய எழுத்தாகவும் பதிந்தால் நலமாய் இருக்கும்"**( யோபு 19:23, 24)

**என் மீட்பர் உயிரேடிருக்கிறார் அவர் கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்.** (19:25)

பழைய ஏற்பாட்டின் பதினெட்டாவது புத்தகத்தின் மிகச் சிறந்த பாத்திரமாகிய பக்தனாகிய யோபுவுக்கு ஒரு பெரிய ஆசை உள்ளத்திலே இருந்தது அது என்னவெனில் தான் பேசும் வார்த்தைகளெல்லாம் காற்றோடு கற்றாக மறைந்துபோய்விடக்கூடாது. இந்த பாவ உலகத்தினின்று தான் கடந்த சென்ற பின்பும் (அதாவது மரித்த பின்பும்) அந்த வார்த்தைகள் மற்றவர்களுக்கு உயிருள்ளவையாக இருக்கவேண்டுமென எண்ணினார். ஆகவே யோபு தான் பேசுகிற வார்த்தைகளை குறித்து எப்படி யோசித்தார் என்று பார்த்தோமானால்...

1. அந்த வார்த்தைகள் எழுதப்பட வேண்டும்.
2. அந்த வார்த்தைகள் ஒரு புத்தகத்திலே வரையப்பட வேண்டும்.
3. அந்த வார்த்தைகள் என்றென்றைக்கும அழியாமல் நிலைத்திருக்கும்படி கருங்கல்லிலே உளி வெட்டாகவும்,ஈயத்தால் எழுதப்பட்ட எழுத்தாகவும் பதியப்படவேண்டும் என்பதே ஆகும்.

பக்தனாகிய யோபுவின் உள்ளத்திலே அவர் சொல்ல விரும்பிய காரியம்தான் என்ன? யோபு சொல்ல நினைத்த மிக முக்கியமான செய்தி என்ன? அதுதான் யோபு 19:25வது வசனம் என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்ற செய்தியானது ஒவ்வொரு மனிதனுடைய இருதயத்தையும் அடையவேண்டும் என்கிற விருப்பம் /ஆவல் கொண்டார். மேலும் யோபுவின் புஸ்தகத்தை வாசித்து பார்த்தால் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு போன்ற முற்பிதாக்களை பற்றிய எந்த குறிப்போ / செய்தியோ காணப்படாததைப் பார்க்கும்போது அவர் ஆபிரகாம் காலத்திற்கு முந்தினவரோ என்று எண்ணத்தோன்றுகிறது.

மேலும் தமிழகத்தை ஆட்சி செய்த சேர, சோழ பாண்டிய மன்னர்கள் குறுநில மன்னர்கள் சிற்றரசர்கள் யாவரும் மறைந்து போனாலும் அவர்களின் வாழ்க்கை வரலாறு எல்லாம் கருங்கல்லிலே செதுக்கப்பட்டு ஜனங்களுடைய பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு காரணம் கருங்கல்லிலே செதுக்கினால் அவைகள் அழியாமல் இருக்கும் என்பதே.

பொதுவாக ஒரு பத்திரிகை அல்லது ஒரு புத்தகத்தை வாசிக்கும் போது அவை எழுதப்பட்டிருக்கும் நடைபயிலிருந்தே அதை எழுதினவரின் குணாதிசயங்கள் எப்படிப்பட்டவை என்பதை நாம் நன்கு அறிந்து கொள்ளமுடியும். மனிதனுடைய கையெழுத்திலிருந்து மனிதனுடைய குணாதிசயங்களை அறிந்துகொள்வதை பார்க்கிலும் தேவனுடைய கையெழுத்திலிருந்து கர்த்தருடைய குணம், வல்லமை, அதிசயம், மகிமை மற்றும் அவர் தரும் ஆலோசனை போன்ற குணாதிசயங்களை அறிந்துகொள்வது நமக்கு நன்மையையும் ஆசீர்வாதத்தையும கொண்டுவரும.

நம தேவாதி தேவன் தம்முடைய சொந்த கரத்தில் விரல்களினால் எழுதின ஒரு சில கையெழுத்தை குறித்து இங்கு தியானிப்போம்.

1. **நியாய பிரமானத்தின் கைழெுத்து.**
2. **தேவாலயத்தை குறித்த கையெழுத்து**
3. **நியாய தீர்ப்பின் கையெழுத்து**
4. **பாவ மன்னிப்பின் கையெழுத்து**

## நியாய பிரமாணத்தின் கையெழுத்து.

**" சீனாய் மலையில் அவர் மோசேயோடே பேசி முடித்தபின் தேவனுடைய விரலினால் எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளை அவனிடத்தில் கொடுத்தார்"** யாத் 31:18.

நம்முடைய அருமை ஆண்டவர் எழுதிய கையெழுத்தை முதன் முதலாக சீனாய் மலையில் பார்க்கிறோம். பரிசுத்தமான தன்னுடைய விரலினால் எழுதப்பட்ட - கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகள் மோசேயினிடத்தில் கொடுத்தார். நமக்காக தேவன் எழுதினார். தேவ மக்களாகிய நமக்குத் கொடுக்க ஒரு அக்கினிப் பிரமாணத்தை எழுதுவதற்கு கர்த்தர் சித்தங்கொண்டார். இந்த அக்கினிப் பிரமாணத்தை வாங்குவதற்கு மோசே நாற்பது நாட்கள் இரவும் பகலும் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் இருந்தார். தேவனுடைய விரல்கள் கற்பலகையில் எழுத ஆரம்பித்த அந்த நிமிடத்தில் மேக மண்டலமானது சீனாய் மலை முழுவதும் மூடியது. பலத்த காற்றும் இடி முழக்கங்களும மின்னல்களும் உண்டாயின. ஜனங்கள் எல்லோரும் பயந்து நடுங்குகிற விதத்திலே தேவனுடைய வல்லமை சீனாய் மலையிலே காணப்பட்டது. கற்பலகையிலே விரலினால் எழுதுவது என்பது மிகவும் கடினமாக ஒரு காரியம். ஒரு கர்த்தருடைய விரல்கிள் காயம் ஏற்பட்டிருக்கலாம் அதன விளைவாக இரத்தம் வடிந்திருக்கலாம் ஆனால் தன்னுடைய கரங்களுக்கும் விரல்களுக்கும் என்ன கஷ்டம் / சேதம் வந்தாலும் பரவாயில்லை. தம்முடைய மக்களாகிய நமக்கு இந்த பிரமாணத்தை கொடுக்க கர்த்தர் எவ்வளவு ஆவல் உள்ளவராய் இருந்தார் என்றுநினைத்து பார்ப்போம்.

தம்முடைய பிள்ளைகளாகிய நாம் எப்படி வேண்டுமானாலும் மனம் போல் வாழட்டும் என்று நினைக்காமல் வாழ வேண்டிய விதிமுறைகளை சட்டதிட்டங்களை வழிமுறைகளை திட்டமும் தெளிவுமாக எவைகளை செய்ய வேண்டும் எவைகளை செய்ய கூடாது என்பதில் கர்த்தர் கண்ணும் கருத்துமாய் கற்பலகைகளின் இரண்டு பக்கத்திலும் எழுதினார். சட்ட திட்டங்கள் அன்பின் வேலியாக இருக்கிறது. வேலிக்குள்ளே வாழ்வது அனேகருக்கு கஷ்டமாய் இருந்தாலும் அது பாதுகாப்பை தருகிறது என்பதை மறந்துபோக கூடாது. ஒரு இடத்தை நாம் வாங்கினால் உடனே நம்மால் வீடு கட்ட முடியாது அதற்கான பணம் கிடைக்குவரையில் நம்முடைய இடத்திற்கு ஒரு முள்வேலி போடுவோமானால் அந்த இடத்தை மற்றவர்களால் ஆக்கிரமிப்பு செய்ய முடியாது. அந்த இடம் எப்போதும் பாதுகாப்பாக இருக்கும். தேவாதி தேவனும் நம்முடைய தந்தையுமாகிய கர்த்தர் கற்பலகைகளிலே உள்ளும் புறமுமாக இரு பக்கத்திலும் அவர் எழுதியதின் நோக்கம் நாம் உள்ளும் புறமும் பரிசுத்தமாய் இருக்க வேண்டும் என்பதே.

இஸ்ரவேல் மக்களுக்காக நியாய பிரமானத்தை எழுதிக்கொடுத்த கர்த்தர் நம் எல்லோருக்கும் முழு வேதாகமத்தையும் எழுதிகொடுத்துள்ளார். வேதாகமத்தில் தேவனுடைய கட்டளைகள் ஆலோசனைகள் வல்லமைகள், அதிசயங்கள், அற்புதங்கள் மற்றும் பரிசுத்தவான்களின் அனுபவங்கள் எல்லாம் இருக்கின்றன. நாம் அவைகளை பின்பற்றுவோமானால் ஒரு நாளும இடறிபோக மாட்டோம். நம்மை வாலாக்காமல் தலையாக்குவார் கீழாகாமல் மேலாவோம். (உபா 28:14) கர்த்தர் கொடுத்த அக்கினி பிரமாணத்தை நாம் கைகொள்வோம்.

## ஆலயம் / தேவாலயத்தை குறித்த கையெழுத்து

**" இந்த மாதிரியின்படி சகல வேலைகளும் எனக்கு தெரியப்படுத்த இவையெல்லாம் கர்த்தருடைய கரத்தினால் எனக்கு எழதிக்கொடுக்கப்பட்டது என்றான்"** (1 நாளா 28:19)

கர்த்தர் தம்முடைய சொந்த கரத்தினால் இரண்டாவது முறையாக எப்போது என்று பார்த்தால் தாவீது இராஜா கர்த்தருக்கென்று ஒரு ஆலயம் கட்ட நினைத்த சமயம். தம்முடைய நாமத்தின் மகிமைக்காக முதல் முதலாக கட்டப்படும் ஆலயமானது எப்படியோ கட்டப்பட்டுபோகட்டும் என்று தேவன் நினைக்கவில்லை. கர்த்தர் அந்த எருசலேம் தேவாலத்தின் வரைபடத்தை தன்னுடைய சொந்த கரத்தினால் எழுத ஆரம்பித்தார். ஆலயத்தின் அமைப்பும் ஆராதனைக்கு ஏற்று ஆசாரியர் லேவியர். வரிசைகள் கிருபாசனம் இருக்கவேண்டிய ஸ்தலம் கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியை மூடும் கேரூபீன்களின் மாதிரி எல்லாவற்றையும் கர்த்தர் தாவீதினிடம் எழுதி வரைந்துகொடுத்ததை தாவீது தன் மகனான சாலமோனிடம்கொடுத்தார்.

கர்த்தருக்கு ஒரு ஆலயம் கட்டவேண்டும் என்ற ஆவல் தாவீது இராஜாவை ஒரு பைத்தியகாரன்போல் ஆக்கியது. அதற்கு தேவையான அனைத்து பொருட்களையும் விலையுயர்ந்த கற்கலைகளையும் உற்சாகத்துடன் முழுஉள்ளத்தோடு சேகரித்தார். ஆனால் தேவன் கூறினார் " தாவீதே தாவீதே நீ எனக்கு ஆலயம் கட்டவேண்டாம். ஏனெனில் நீ யுத்த மனுஷயிருந்து இரத்தத்தை சிந்தினாய் என்றார்.

கர்த்தர் கூறின வார்த்தையே தாவீது கேட்டபோது தான் ஒரு இராஜா என்பதைதே மறந்து சிறு குழந்தையைபோல் சத்தமிட்டு அழுதிருப்பார். அதை கண்ட நம் இரக்கத்தின் தேவன் தாவீதை சமாதானம் செய்து ஆலயத்தின் வரைபடத்தை தன் கையால் எழுதிக்கொடுத்தார்.

கர்த்தரால் கொடுக்கப்பட்ட வரை படத்தின் படி மகிமையான ஒரு தேவாலயத்தை சாலமேன் கட்டி எழுப்பினார். ஆலயமானது கர்த்தர் எழுதிக்கொடுத்தபடி வரைந்துகொடுத்தபடி எல்லாம் அமைந்தது. ஆலய பிரதிஷ்டையின்போது சாலமோன் ஜெபம் பண்ணும்வேலையில் மகிமையின் மேகங்கள் இறங்கிவந்தன. தேவனுடைய பிரசன்னம் கடந்து வந்தது. தேவனுடைய மகிமையால் ஆலயம் நிறம்பிற்று.

புதிய ஏற்பாட்டில் கர்த்தருடைய ஆலயமாய் ஆசரிப்பு கூடாரமாய் ஜெப வீடாய் வாசஸ்தலமாய் நாமே இருக்கிறோம். நம்முடைய வாழ்க்கையை குறித்து ஆண்டவர் ஒரு நோக்கம் கொண்டிருக்கிறார். நம்முடைய வாழ்க்கை கர்த்தருடைய திட்டத்தின்பயேயும் தீர்மானம், கையெழுத்து மற்றும் மாதிரியின்படியேயும் இருக்குமானால் நம் தேவாதிதேவன் நம்மில் வாசமாய் இருப்பார். நாமும் அவருடைய ஜனமாய் இருப்போம் அவரும் நம்முடைய தேவனாய் இருப்பார்.

## 3. நியாய தீர்ப்பின் கையெழுத்து

அப்பொழுது அந்த கையிருப்பு அவரால் அனுப்பப்பட்ட இந்த எழுத்து எழுதப்பட்டது. எழுதப்பட்ட எழுத்து என்னவென்றால் " **மெனே மெனே தெக்கேல் உப்பார்சின்"** என்பதே (தானி 5:24,25).கர்த்தர் எப்பொழுது நியாய தீர்ப்பை எழுதுவார் எந்த ஒரு மனுஷன் மனுஷி கர்த்தருடைய கட்டளையை மதிக்கவில்லையோ கீழ்படியவில்லையோ அப்போது அந்த ஆணுக்கோ, பெண்ணுக்கோ நியாய தீர்ப்பை எழுதுகிறார்.

நேபுக்காத் நேச்சாரின் மகனான பெல்ஷாத்சார் இராஜாவாக அரியணையில் அமர்ந்தபோது அவனது அரண்மனையில் ஏராளமான விலையுயர்ந்த வெள்ளி பாத்திரங்கள் இருந்திருக்கலாம். வைரம் முத்து வைடூரியம் போன்ற விலையுயர்ந்த ஆபரண பொருட்கள் பதிந்த பாத்திரங்கள் அரண்மனையில் இருந்திருக்கலாம். ஆனாலும் அந்த பாத்திரங்களெல்லாம் தன் அரண்மனையில் நடக்கும் விருந்துக்கு உபயோகப்படுத்தாமல் தன் தகப்பனாகிய நேபிக்காத் நிஷார் எருசலேம் தேவாலத்தில் இருந்து கொண்டுவந்த பொன் வெள்ளி பாத்திரங்களில் தானும் தன்னுடைய பிரபுக்களும் மனைவிகளும் தன் வைப்பாட்டிகளும் குடிப்பதற்காக கொண்டுவரும்படி கட்டளை பிறப்பித்து தேவனை அசட்டை செய்து கர்த்தருக்கென்று பிரதிஷ்டைசெய்யப்பட்ட பரிசுத்தமான பணிமூட்டுக்ளை தீட்டு படுத்தினான். 1 கொரி 3:17லே அப். பவுல் என்ன எழுதுகிறார். " ஒருவன் தேவனுடைய ஆலயத்தை கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம் உங்களுடைய சரீரத்தின் ஒவ்வொரு அவயமும் தேவாலத்தின் பாத்திரங்களாய் இருக்கிறது. ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலுமு தேவனை மகிமைப்படுத்துங்கள் (1கொரி 6:20)

அன்பிற்குரிய சகோதர சகோதரிகளே, தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களும் அந்த ஆலயம். ஆகவே தேவனுடைய ஆலயமாகிய நம் இருதயத்தை பரிசுத்தமாக வைத்துக்கொள்வோம். தேவனே உமக்கான ஆலயம் பாவியின் சிறு நெஞ்சமே. பாவம் யாவையும் நீக்கியே சிறு தேவ ஆலயம் ஆக்கிடும் என்ற கீர்த்தனை பாடலானது நம் உள்ளம் தான் இருதயம் தான் தேவனுடைய ஆலயம் என்று தெளிவுபடுத்துகிறது.

கர்த்தர் நமக்கு நியாயதீர்ப்பை கொடுக்க விரும்பவில்லை. கிருபை பாராட்டவே விரும்புகிறார். தேவன் நம் எல்லாரையுமே பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.

சுவரில் எழுதின எழுத்தை இராஜாவின் அரண்மனையில் இருந்த ஜோசியர்கள் கல்தேயர்கள் குறி சொல்லுகிறவர்கள் ஒருவராலும் வாசிக்க முடியவில்லை. நாம் நன்கு அறிந்துகொள்ளவேண்டிய ஒரு காரியம் என்னவென்றால் கர்த்தர் எழுதின எழுத்துக்களை சாதாரண எந்த மனிதனாலும் வாசிக்க முடியாது. அதே சமயம் அர்த்தம் கூறவும் முடியாது. தேவனோடே நெருங்கிய ஐக்கியம் கொண்டுள்ள பரிசுத்தமான மனிதனால் மட்டுமே முடியும். ஆகவேதான் கர்த்தர் எழுதின எழுத்துக்களை தேவ மனிதனான தானியேலால் மட்டுமே வாசிக்கவும் அதன் அர்த்ததை சொல்லவும் முடிந்தது.

சுவரில் எழுதப்பட்ட அந்த எழுத்துக்கள் என்ன? மெனே மெனே தெக்கேல் உப்பாசின் என்பது. மெனே மெனே என்பதற்கு அர்த்தம் தேவன் உன் இராஜ்ஜியத்தை மட்டிட்டு அதற்கு முடிவு உண்டாக்கினார். மட்டிட்டு என்றால் நாட்களை எண்ணு என்று அர்த்தம். தெக்கேல் என்பதற்கு நீ தாராசிலே நிறுத்தப்பட்டு குறையை காணப்பட்டாய் என்று அர்த்தம் உப்பாசின் என்பதற்கு உன் இராஜ்ஜியம் பிரிக்கப்பட்டு மேதியற்கும் பெர்சியருக்கும் கொடுக்கப்பட்டது என்பது அர்த்தமாம் என்று தானியேல் தேவனுடைய எழுதுக்களுக்கும் அர்த்தம் கூறினார்.

பெல்ஷாத்சார் கொடுத்த விருந்தும் குடித்த மதுபானமும் ஜீரணமாவதற்குள் கர்த்தரின் கையிருப்பு தோன்றியது. அன்றே பெல்ஷாத்சார் இராஜாவின்மீது கர்த்தரின் நியாய தீர்ப்பு வந்தது அன்று இரவு அவன் கொலை செய்யபட்டான். தேவனின் நியாய தீர்ப்பு பாபிலோனிய சாம்ராஜ்ஜியத்திற்கு ஒரு முடிவை உண்டாக்கியது. பொன்னினால் செய்யப்பட்ட தலைபோன்ற உன்னத நிலையிலிருந்த பாபிலோனிய சாம்ராஜ்ஜியம் உலக வரலாற்றிலிருந்து நீக்கப்பட்டுபோனது. தேவனின் நியாய தீர்ப்பு உண்மையானது. மேதியனாகிய தரியு தன்னுடைய 62ம் வயதில் இராஜ்ஜியத்தை கட்டிக்கொண்டான்.

நீதியுள்ள தேவாதி தேவனாகிய நம் கர்த்தரின் கையில் தராசு இருக்கிறது. நாம் எப்படி இருக்கிறோம். குறையுள்ளவர்களாக இருக்கிறோமா அல்லது நிறையுள்ளவர்களாக இருக்கிறோமே என்று சீர்தூக்கி பார்க்கிறோம். பக்தனாகிய யோபு தன்னுடைய புத்தகம் 31:6ல் எழுதுகிறார். சுமத்திரையான தராசிலே என்னை நிறுத்து என் ஊத்தமத்தை அறிவாராக என்று தைரியமாக சொல்லுகிறார். நம்மை நாமே நிதானித்தால் அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். (1 கொரி 11:31)

# 4. பாவ மன்னிப்பின் கையெழுத்து

இயேசுவின்மேல் குற்றம் சுமத்துவதற்கான காரணம் உண்டாக்கும் பொருட்டு அவரை சோதிக்கும் படி இப்படி சொன்னார்கள் இயேசுவோ குனிந்து விரலினால் தரையிலே எழுதினார். (யோபு 8:6). ஆண்டவராகிய இயேசு தேவாலயத்தில் உட்கார்ந்து ஜனங்களுக்கு உபதேசம் பண்ணிக்கொண்டிருந்த சமயத்தில் பரிசேயர், சதுசேயர் வேத பாரகர் ஆகியோர் விபச்சாரத்திலே கையும் மெய்யுமாய் பிடிபட்ட ஒரு பெண்ணை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடம் கொண்டுவந்து நிறுத்தின ஒரு சம்பவத்தை யோவான் 8ம் அதிகாரத்தின் 8ம் அதிகாரத்தின் துவக்கத்தில் நாம் பார்க்கிறோம்.

விபச்சாரத்தில் எந்த ஒரு ஆணும். எந்த ஒரு பெண்ணும் தனியாக ஈடுபட முடியாது. ஆனால் இங்கே ஆண்டவராகிய இயேசுவிடம் ஒரு பெண்ணை மட்டும் கொண்டு வந்து நடுவே நிறுத்தினார்கள் அப்படியானால் அந்த பெண்ணுடன் இருந்த மனுஷன் எங்கே. அவனை மட்டும் ஏன் ஆண்டவரிடம் கொண்டுவரவில்லை என்று யோசிக்க தோன்றுகிறது. அந்த பெண்ணை மட்டும் ஆண்டவரிடம் கொண்டுவந்ததின் நோக்கம் என்ன?

1. மோசேயின் நியாய பிரமானத்தின்படி இந்த பெண்ணை கல் எரிந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்தால் ஜனங்களில் யாராவது இந்த பெண்ணுடன் இருந்த அந்த மனுஷன் யார்? நியாய பிரமாணத்தின்படி இரண்டுபேரும் கல் எரிந்து கொள்ளப்படவேண்டும். என்றே கேள்வி பிறக்குமே என்று பயந்தனர்.

2. மோசேயின் நியாய பிரமாணம் இப்படி இருக்கிறது நீர் என்ன சொல்லுகிறீர்? என்று ஓயாமல் பலமுறை இயேசுவிடம் கேட்டனர். நியாயப் பிரமாணத்தின்படி இந்தப் பெண்ணுக்கு என்ன தண்டணை கொடுக்கணுமோ அதைச் செய்யுங்கள் என்று ஒரு வேளை ஆண்டவர் சொல்லி விட்டால் போதகரே கூறிவிட்டார் "கல்லெறிந்து கொள்ளும்படி" என்று ஆண்டவர் மீது குற்றத்தைப்போட்டு. அந்தப் பெண்ணை மட்டும் கொன்றுவிடலாம். தங்களுடைய உறவினனான அந்த ஆண் மகனை தப்பிக்க வைத்து விடலாம் என்று எண்ணினார்.

தேவ மக்களே ஒ்னறை மட்டும் நிச்சயமாக உறுதியாக நினைவில் கொள்ளுங்கள். கர்த்தரின் பார்வையிருந்து யாரும் தப்பிக்க முடியாது. ஆண்டராகிய இயேசு இரண்டு முறை குனிந்து தரையில் எழுதினார் என்று வேதத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் இயேசு என்ன ஏழுதினார்? என்று வேதம் எதுவும் சொல்லவில்லை.

இயேசுவானவர் இரண்டு வகையான நியாயத் தீர்ப்பை தன் விரலினால் தரையில் எழதினார். இரண்டு தரம் நமிர்ந்து பார்த்து அந்த நியாயத் தீர்ப்பைக் கூறினார்.

முதலாவதாக அந்தப் பெண்ணைக் குற்றவாளியாக அழைத்துக்கொண்டு வந்த சிறியோர் முதல் பெரியோர் வரைக்கும், வேதபாரகர், பரிசேயர், சதுசேயர், இவர்களை நிமிர்ந்து பார்த்து "உங்களில் பாவமில்லாதவன் இவன்மேல் முதலாவது கல்லெறியக் கடவன்" என்று சொல்லி

கூட்டத்திலிருந்த ஒவ்வொருவர் பாவங்களையும் அவரவர்களுக்கு உணர்த்தி ஒரு நியாயத் தீர்ப்பை எழதினார். ஆண்டவர் எழுதிய தீர்ப்பில ஒவ்வொரு வரும் மனசாட்சியால் குத்தப்பட்டு. அவ்விடத்தை விட்டுக் கடந்து சென்றனர்.

இரண்டாவதாக. கையும் செய்யுமாக பிடிக்ப்பட்ட குற்றவாளிக்கு பாவமன்னிப்பு என்ற நியாயத் தீப்பை எழுதி . " நீ போ. இனி பாவம் செய்யாதே" என்று கூறி நம் இரக்கத்தின் தேவன் அந்தப் பெண்ணை அனுப்பிவிட்டார். நம் ஆண்டவராகிய இயேசுவின் விரல்கள் அந்த ஸ்திரீயின்மேல் கல்லெறிவதற்காக கற்களை எடுக்கவில்லை. அதற்கு பதிலாக. கிருபையான வார்த்தைகளையே எழுதியது.

பாவத்தின் தண்டனை அகோரமானது. பாவத்தின் சம்பளம் மரணம் நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால். பாவங்களை மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்குக் கர்தத்ர் நீதியும். உண்மையும் உள்ளவராயிருக்கிறார். மனந்திரும்புகிற ஒரே பாவியின் நிமித்தம் பரலேகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகும்.

ஜான். மேத்யூ என்று இரண்டு கிறிஸ்தவ சகோதரர்கள் இருந்தனர். ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று இருவரும் ஆலயத்திற்குச் சென்றனர். ஆலய ஆராதனை முடிந்ததும். இரண்டு பேரும் வேக வேகமாக வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தனர். வெயிலின் கதிர்கள் அதிக உஷ்ணமாக இருந்தபடியால் இரண்டு பேரும் மிகவும் களைப்படைந்தனர். ஒரு கடையின் நிழலில் இருவரும் நின்றனர். ஜான் சுற்றும் முற்றும் கண்களை ஓடவிடடான். திடீரென்று அவனுடைய கண்களிலே ஒரு போர்டு தெரிந்தது. அதிலிருந்த வாசகம் ஜானை அகமாக உற்சாகப்படுத்தியது. வெயிலின் தாக்கம் கூட ஜானுக்கு மறந்துபோனது. அந்த போர்டில் என்ன எழுதியிருந்தது? ''இங்கே அன்னதானம் போடப்படும்'' உடனே ஜானுக்கு ஒரு யோசனை தோன்றியது. அவன் மேத்யூவிடம் பின்வருமாறு கூறினான்.

நாம் இருவரும் கிறிஸ்தவ மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இந்த கிறிஸ்தவப் பெயரிலே சென்றால். அந்த முஸ்லீம் மசூதியிலே அன்னதானம தரமாட்டார்கள். ஆகவே நாம் இருவரும் முஸ்லீம் பெயரை வைத்துக்கொள்வோம் என்று மேத்யூவிடம் கூறினான். மேத்யூ இதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால் ஜான் அருகில் உள்ள ஒரு முஸ்லீம் கடையில் ஒரு தொப்பியை வாங்கி. தன் தலையின் மீது அணிந்து கொண்டான். தன்னுடைய பெயரை இஸ்மாயில் என்று மாற்றிக்கொண்டான். இரண்டு பேரும் அந்த மசூதியை நோக்கிப் புறப்பட்டனர்.

இஸ்மாயில் என்ற பெயர் மாற்றம் செய்து கொண்ட ஜான். தன்னுடைய சகோதரனாகிய மேத்யூவை அழைத்துக்கொண்டு மசூதிக்குள் நுழைந்தான் . மசூதியில் வேலை செய்துகொண்டிருந்த ஒரு முஸ்லீம் பெரியவர் "உங்களுக்கு என்ன வேண்டும்" என்று இரண்டு பேரையும் பார்த்துகேட்டார். ஜான் கூறினான். "அன்னதானம் போடப்படும்" என்ற பலகையைப் பார்த்து. உள்ளே வந்தோம் என்று கூறினான். முஸ்லீம் பெரியவர் அவர்கள் இருவரையும் ஒரு கல்லின் மீது அமரும்படி கூறி உள்ளே சென்று ஒரு தட்டில் கொஞ்சம் பழங்கள். ஒரு டம்ளர்

தண்ணீரோடும் வந்து அந்த தட்டை மேத்யூவிடம் கொடுத்து சாப்பிடும்படி கூறினார். மேத்யூ தன் சகோதரனாகிய ஜானை திரும்பிப் பார்த்தான். பெரியவர் கீழ்வருமாறு கூறினார். மேத்யூ நீ ஒரு புறமதஸ்தன். இஸ்லாமிய சட்ட திட்டக்கோட்பாடுகள் எதுவும் உனக்குத் தெரியாது. ஆகவே தான் உனக்கு பசி என்று கூறி வந்த உன்னை வாட்டக்கூடாதே என்று நினைத்து பழங்கள் கொடுத்தேன். ஆனால் இஸ்மாயில் (ஜான்) அப்படி அல்ல. இந்த மாதம் ரம்ஜான் நோன்பு இருக்கும் நாட்கள். இஸ்மாயிலுக்கு (ஜானுக்கு) இஸ்லாமியக் கோட்பாடுகள் தெரியும். ஆகவே மாலை 5-00 மணிக்கு வேதம் ஓதியபின் அவனுக்கு நோன்பு கஞ்சி தருவேன் என்று கூறினார்.

ஒரு கூழுக்காக ஏசா எப்படி தன்னுடைய சேஷ்டபுத்திர பாகத்தை இழந்தானோ, அதேபோல் ஜான் ஒரு நோன்பு கஞ்சிக்காக ஆண்டவரை விட்டு மனம மாறி வேறு பாதையில் சென்று விட்டானே என்று மேத்யூ மனம் வருந்தினான். இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தால் பரலோகத்தில் எப்படி மிகுந்த சந்தோஷம் காண முடியும்?. பூமியிலே ஒரு குழந்தை பிறக்கும்போது அன்றைக்கே அரசாங்கப் பதிவேட்டில் அந்த குழந்தை ஆணா. பெண்ணா. பெயர். பெற்றோரின் பெயர் எல்லாம் உடனடியாகப் பதிவி செய்யப்படும். அதேபோல் ஆண்டவருடைய பரலோக பதிவு ஊடாகிய ஜீவபுஸ்தவக்தில் நம் ஒவ்வொருவருடைய பெயரும் பதிவு பண்ணப்படவேண்டும்.

கற்பலகையில் சடடத்தை எழுதியவர் ஆலயத்தின் வரைபடத்தை வரைந்தவர். நியாயத் தீர்ப்பை எழுதியவர் மன்னிப்பையும் எழுதினார். அப்பேர்பட்ட தேவாதி தேவன் நம்மிடம் எதிர்ப்பார்ப்பது ஒன்றே ஒன்று மட்டுமே. அது மனந்திரும்புதல் நாம் மனம் திருந்தினால் மட்டும் போதும் நம்முடைய பெயரையும் ஜீவ புத்தகத்தல் அவருடைய விரலினால் எழுதும் கையொழுத்தாக அது இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. மனந்திருந்துவோமாக: கர்த்தரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வோமாக ஆமென்.

**செய்திகள்!** **செய்திகள்!!**

## இயற்கை பருவநிலை மாற்றத்தின் விளைவுகள்:

**கடவுளின் நாடு** என்று புகழப்படும் **கேரளா** மாநிலத்தில் சில மாதங்களுக்குமுன் ஒரு வருடத்தில் பெய்யவேண்டிய **மழை வானத்தில்** ஓட்டை விழுந்ததைப்போல் மழை கொட்டோ கொட்டென்று கொட்டி தீர்த்தது. **கேரளா** மாநிலத்தின் பல மாவட்டங்களை தலைகீழ் ஆக்கிப்போட்டு பெருத்த சேதத்தை உண்டாக்கியது. அங்கு பாதிக்கப்பட்ட மக்கள் வீட்டை இழந்தனர். ஆடு,மாடு,கோழி ஆகியவற்றையும், குடும்ப மக்களில் பலரையும் வெள்ளம் அடித்து சென்றது.

காரணம், நாட்டில் உண்டான திடீர் பருவநிலை மாற்றம்தான். அந்த பெருமழையை கொண்டு வந்தது. இந்தியாவில் **உத்ரகாண்ட்** மாநிலத்தில் பெய்த மழையும், மாநிலம் முழுவதையும் சோககாடாக மாற்றியது. ஒரு வருடத்தில் பெய்ய வேண்டிய மழை ஒரே வாரத்தில் பெய்து அந்த மாநிலத்தையே **வெள்ள காடாக** மாற்றியது. கேரளத்திலாவது வெள்ளத்தில் அகப்பட்ட பலருக்கு இரண்டு நாட்கள் தாமதமாகவாவது சாப்பிடவும்,தண்ணீர் குடிக்கவும் உதவி கிடைத்தது. ஆனால் உத்ரகாண்ட்டில் ஹெலிகாப்டர்கூட இறங்கமுடியாத நிலை ஏற்பட்டது. **சாலைவழி, ரயில் வழி** ஆகிய எந்த வழியிலும் எந்த உதவி பொருளும் பாதிக்கப்பட்டவர்களிடம் கொண்டு செல்ல முடியாமல்போனது சோகமே!.

# சகோ. சாம் ஜெபதுரை அவர்களின் மரணம்

இந்தியாவில் **தமிழ்நாட்டில்** பிரபல கிறிஸ்தவ எழுத்தாளரும் எழுப்புதல் பிரசங்கியாருமான **சகோ. சாம் ஜெபதுரை** அவர்கள் திடீர் என்று உடல் நிலை சுகவீனமுற்று வீட்டில் மரணமடைந்தார்.



ஊழியர்களில் எளிமையானவர்,எல்லா ஊழியர்களிடமும் அன்போடு பழகுவார். ஏற்கனவே இரண்டுமுறை மரணத்தின் வாசல் வரை போய் உயிர் பிழைத்தவர். ஒருமுறை மூளை நரம்பு பாதிக்கப்பட்டு வெல்லூர் CMC ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று தேறினார் என்றாலும் முகவாதத்தால் தாக்கப்பட்டு வாய் கோணலாகிப்போனாது. பலரின் ஜெபத்தால் மறுபடியும் பிரசங்கிக்கும் கிருபையை பெற்றார்.

**சகோ.சாம்ஜெபதுரை** அவர்கள் மரணத்தால் வேதனையுற்றிருக்கும் அவர் குடும்பத்தினருக்கும், அவரின் சொந்த சபையினருக்கும், அவர் ஊழியத்தின் உடன் நண்பர்களுக்கும் என் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறேன். இவர் சுமார் 900 கிறிஸ்தவ ஆவிக்குரிய புஸ்தகங்களை எழுதியுள்ளார்.

## சகோ.சாம்ஜெபதுரை அவர்களின் மறுபக்கம்:
## அன்றன்றுள்ள அப்பம்:

சகோ.சாம் ஜெபதுரை அவர்களின் தினசரி தியான புஸ்தகமான **அன்றன்றுள்ள அப்பம்** என்ற பெயரில் வெளியிடும் மாத புத்தகம் கிறிஸ்தவர்களிடயே சிறப்பு பெற்றதாகும்.

அனேக ஆண்டுகளுக்கு முன் **இலங்கை வானொலி** மூலமாக வெளிவரும் **சத்தியவசன** வானொலி நிகழ்ச்சியின் பங்காளர்களுக்கு ஆவிக்குறிய தொடர்புக்கொள்ள மாதாந்திர பத்திரிகை **இலங்கையில்** தொடங்கப்பட்டது. சகோ.**ரிச்சார்ட்** அவர்களும், திருமதி.**மடோஸ் அம்மையார்** அவர்களும், சகோ. சாம் ஜெபதுரை அவர்களைக்கொண்டு **அன்றன்றன்றுள்ள அப்பம்** என்ற பெயரில் **தினசரி தியான புத்தகம்** தொடங்கி சகோ.சாம் ஜெபதுரையுடன், வேரு சிலரும் தியான செய்திகளை அதில் எழுதி வந்தார்கள். ஆரம்பத்தில் அந்த தியான புத்தகம் பலருக்கு பிரயோஜனமாக அமைந்தது. ஆனால் சில மாதங்களிலேயே **சகோ.சாம்ஜெபதுரை** எழுதிய தியான செய்தியில் **உபதேச குழப்பங்கள்** கலக்கப்பட்டிருப்பதை அறிந்தனர். உடனே **சகோ.சாம் ஜெபதுரை** அவர்களிடம் தியான புத்தக் செய்திகளை **இனி எழுதி அனுப்பவேண்டாம்.** நாங்களே பார்த்துக்கொள்கிறோம் என்று கூறிவிட்டனர்.

ஆனால் சாம் ஜெபதுரை அவர்கள் இந்தியாவில் தமிழ்நாட்டில் சொந்தமாக அன்றன்றுள்ள அப்பம் என்ற பெயரிலேயே தியான புத்தகம் தொடங்கிவிட்டார். இலங்கை சத்திய வசனத்துக்கு சொந்தமான அதே பெயரில் இவர் மற்றொரு தியான புத்தகம் வெளியிட்டது சத்திய வசன நிலையத்தினருக்கு வருத்தம் அளித்தது. அவரிடம் வாக்குவாதம் செய்யவோ அன்றன்றுள்ள அப்பம் பெயரை உபயோகிக்ககூடாது என்று கண்டித்து கட்டளையிட ஸ்தாபனத்தார் விரும்பவில்லை. பெருந்தன்மையுடன் அந்த பெயரை விட்டுக்கொடுத்தனர்.

அதன்பிறகு அதற்கு பதிலாக **அனுதினமன்னா** என்ற பெயரில் இலங்கை சத்திய வசன நிலையத்தினர் தினசரி தியான புத்தகத்தை வெளியிட்டார்கள அது உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கு மிகவும் பிரயோஜனமாக அமைந்தது. அதன்பின் சகோ.சாம் ஜெபதுரை அவர்கள் சுதந்திரமாக அன்றன்றுள்ள அப்பம் என்ற பெயரில் மாதம் தோறும் பத்திரிகை வெளியிட்டுக்கொண்டிருந்தார். அதில் முழுவதும் பெற்தேகோஸ்தே உபதேசத்தை நுழைத்தார்.

**அன்னிய பாஷை, அக்கினி அபிஷேகம்** இன்னும் வேத வசனத்துக்கு முரனான தன் சொந்த வியாக்கியானங்களை தன் புத்தகங்களில் எழுத தொடங்கினார். இயேசுவும் மனுஷ குமாரனாக வாழ்ந்தபோது வியாதி படுக்கையில் கிடந்தார் என்றும் அவர் நம்மைபோல் வியாதியின் வேதனையையும் அனுபவித்தார் என்பதை போன்ற வேதத்தில் இல்லாத தவறான கருத்துக்களை வெளியிட்டார். இயேசு வியாதியில் பாதிக்கப்பட்டதாக புதிய ஏற்பாட்டில் எங்கும் எழுதப்படவில்லை. அந்த மாதிரி பல தவறான உபதேசங்களை அவர் பத்திரிகையில் வெளியிட்டதை நான் ஜாமக்காரனில் சுட்டிக்காட்டி ஜாமக்காரன் வாசகர்களை எச்சரிக்கும் வண்ணம் எழுதினேன்.

அந்த காலத்தில் **திருப்பத்தூரில் 3 நாள்** உபவாசக்கூட்டத்தை ஒவ்வொரு வருடமும் மூவரணியான **சகோ. சாம் ஜெபதுரை, சகோ. மோகன் சி. லாசரஸ்** ஆகியவர்கள் இணைந்து கூட்டத்தை நடத்துவார்கள். அப்போதுதான் அந்த மூன்று ஊழியர்களுக்கும் என்மேல்கொண்ட கோபம் எத்தகையது என்று விளங்கியது. இவர்கள் இணைந்து கர்த்தாவே எங்களுக்கு விரோதமாயும் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாயும் எழுதும் பத்திரிகை ஜாமக்காரனை அழித்துவிடும் என்று அந்த 3நாள் உபவாச ஜெபகூட்டத்தில் ஜெபித்ததைக்குறித்து பலர் எனக்கு எழுதினார்கள். **சகோ.மோகன் சி.லாசரஸ்** மட்டும்தான் அந்த ஜெபத்தில் கலந்துக்கொண்டாலும் நான் ஜாமக்காரன் அழியவேண்டும் என்று ஜெபிக்கவில்லை என்று எனக்கு கடிதம் எழுதி அறிவித்தார். மோகன் சி.லாசரஸ் அந்த ஜெபத்தை தன் வாயால் ஜெபிக்காவிட்டாலும் ஜெபித்தவர்கள் ஜெபத்தை முடிக்கும்போது ஆமென் என்று **சகோ.மோகன் சி.லாசரஸ்** கூறியிருக்கவேண்டுமே. ஆமென் என்றால் அப்படியே ஆகக்கடகவது என்று அர்த்தம்.

**சகோ.சாம்ஜெபதுரை** அவர்கள் ஜாமக்காரனால் தன் பத்திரிக்கை ஊழியம் பாதிக்கப்பட்டதாக கூறி தனக்கு **நஷ்டஈடு கேட்டு வக்கீல் நோட்டீஸ்** அனுப்பினார்.

ஒரு ஊழியக்காரருக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பிய முதல் பெந்தேகோஸ்தே பாஸ்டர்,பிரசங்கியார் என்ற **சிறப்பு பெயர் சகோ.சாம் ஜெபதுரை** அவர்களுக்கு உண்டு.

❖ அநேக ஆண்டுகளுக்கு முன் வங்கியில் சேர்த்த ஏராளமான **பணம்** அதிகாரிகள் கண்டுப்பிடித்ததாகவும் ரூபாய்கள் எரிக்கப்பட்டதாகவும் செய்திகள் காட்டுத்தீ போல் பரவியது.

❖ சகோதரன் **சாம் ஜெபதுரை** அவர்கள் பெந்தேகோஸ்தே ஊழியக்காரர்களில் எனக்கு **மாதாமாதம் காணிக்கை அனுப்பியவர்** என்ற நல்ல செய்தியையும் இந்த நேரத்தில் அறிவிக்கிறேன். அதுமட்டுமல்ல. குறிப்பிட்ட **மாதகாணிக்கையை** தபால்மூலம் அனுப்பியிருந்ததால் அவரே **சேலத்தில்** என் வீட்டுக்கு நேரில் வந்து என் மனைவியிடம் காணிக்கையை ஒப்படைத்து ஜெபித்து சென்றதையும் இந்த மறுபக்கம் கட்டுரையின் கடைசி தகவலாக அறிவிக்கிறேன்.

சகோ.சாம் ஜெபதுரையின் மரண செய்தி கேட்டு துக்கத்தில் இருக்கும் வேளையில் கூடவா சகோதரனைப்பற்றிய இப்படிப்பட்ட செய்தியை அறிவிக்கவேண்டும் என்று பலர் மனதில் நினைப்பீர்கள் என்பதையும் நான் அறிவேன். மரண செய்தி கேட்டபோது அவரின் மறுபக்க சுபாவங்கள்,செயல்கள் யாவும் ஒன்றன்பின் ஒன்றாக நினைவில் வந்தது எழுதிவிட்டேன். தவிர்க்கமுடியவில்லை.

**செய்திகள்! செய்திகள்!!**

## அரேபிய நாட்டிலும் - பருவநிலை மாற்றம்:

அரேபியாவில் **தோஹா-கட்டார்** என்ற நாட்டில் 2018 கடந்த அக்டோபர் மாதம் 21,22ல் பெய்த மழையின் அளவு என்ன தெரியுமா? அந்த பாலைவன நாட்டில் **ஒரு முழு வருடமும் பெய்யும் மழையின்** அளவு **60 மி.மீ** ஆகும். ஆனால் சனிக்கிழமை ஒருநாள் மட்டும் அங்கு பெய்த மழையின் அளவு என்ன தெரியுமா? **77 மி.மீ** ஆகும்.

வளர்ந்த நாடு **பாலைவன பிரதேசமானதா**ல் மக்களின் மரண எண்ணிக்கை குறைவுதான். ஆனால் அங்கு விமான சேவை முற்றிலும் பாதிக்கப்பட்டது. பல வாரங்கள் அதை சரி செய்ய முடியாமல் பல பில்லியன் டாலர்கள் நஷ்டம். பொருளாதார சரிவு,வியாபாரம் முடங்கியது. வெளிநாடுகளிலிருந்து வந்த உல்லாச பயணிகள் சொந்த தேசம் செல்லமுடியாமல் தவித்தனர். வியாபாரம் முற்றும் முடங்கிப்போனது. காரணம் பருவநிலை மாற்றம் ஆகும்.

இதை செய்தியாக ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் **உலகத்தின் முடிவுக்கு மிகவும்** நெருங்கி வந்துக்கொண்டிருக்கிறோம். இயேசுகிறிஸ்து தீர்க்கதரிசனமாக மத் 24, மாற்கு 14, லூக்கா 23 ஆகியவற்றில் உலக முடிவுக்கு அடையாளமாக கூறிய முக்கிய அடையாளங்களில் ஒன்றுதான் இயற்கை மாற்றமாகும். வானத்தில் மாற்றம் பூமியின் வெப்பநிலையில் மாற்றம். அதன் காரணமாக பருவநிலை மாற்றம் ஆகியவைதான் அழிவை உலகிற்கு கொண்டு வருகிறது. உலக நாடுகள், **விஞ்ஞானிகள்,அறிவியல் ஆராய்ச்சிகள்** ஆகியவற்றால் ஒன்றும் செய்யமுடியவில்லை. **இயற்கை சீற்றத்திற்கு முன் யாரும் ஒன்றும் செய்யமுடியாது.** கர்த்தரையும் அல்லது நம் மரணத்தையும் நாம் சந்திக்க ஆயத்தமாவோம். ஜெபிப்போம்.

# Vellore C.S.I. டையோசிஸ்

## சத்துவாச்சாரி CMC Colony St. Paul's Church கன்வென்ஷன்




வெல்லூாில் நடந்த இந்த கூட்டங்களை கர்த்தர் மிகவும் ஆசீர்வாதித்தார்.. பலர் இரட்சிப்பின் அனுபவத்தை பெற்றனர். கூட்டம் முடிந்த மறுவாரமே இரண்டு குடும்பங்கள் ஒருவருக்கொருவர் ஒப்புரவாகி சமாதானம் செய்துகொண்டதை குறித்து வந்த கடிதத்தை நான் வாசித்தபோது கர்த்தர் எத்தனையாய் வசனத்தின் மூலமாய் கிரியை செய்தார் என்பதை அறிந்து கர்த்தரை துதித்தேன்.

ஒருவர் மட்டும் நான் குடியை நிறுத்த உங்கள் கூட்டத்தின் கடைசி நாள் கூட்டத்தில் தீர்மானித்தேன். அந்த தீர்மானம் வெற்றிபெற நீங்கள் தொடர்ந்து எனக்காக ஜெபிக்க வேண்டும். இதற்குமுன் பலமுறை குடியை நிறுத்த முயன்று தோல்வி அடைந்தவன் நான். உங்கள் கூட்டத்தின் கடைசி நாள் சாட்சியும் செய்தியும் என்னை உலுக்கிவிட்டது. உங்களை எங்கள் சபைக்கு கொண்டுவந்த கர்த்தரை துதிக்கிறேன். மாலை நேரமானால் குடிக்கும் எண்ணம் வராமல் இருக்க எனக்காக ஜெபியுங்கள் என்று தொலைபேசியில் கூறியபோது அதே நிமிடம் தொலைபேசியில் அவருக்காக ஜெபித்தேன். அவர் தன் பெயர் கூற விரும்பவில்லை. கர்த்தர் **வெல்லூரில்** செய்த அற்புத கிரியைகளுக்காக தேவனை துதிக்கிறேன்.

சபை தலைமை ஆயர் **Rev. Dr. தியாகராஜன்.** இணைஆயர் **Rev. W. ஜெயகர் வில்சன்,** செயலர் **திரு. மைக்கல்ராஜ்** யாவரும் இணைந்து கூட்ட ஏற்பாடுகளை அருமையாக செய்திருந்தார்கள். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

# வாலிபர் கூட்டங்கள் (YOUTH CAMP) எண்ணூர் சென்னை

**சென்னையில் எண்ணூர்** என்ற இடத்தில் **Don Bosco Youth Animation Centre, Ennor** என்ற இடத்தில் வாலிப ஆண்கள்-வாலிப பெண்களுக்கான 3 நாட்கள் சிறப்பு கூடுகை Trumpeters of Christ என்ற இயக்கத்தினரால் வெகுசிறப்பாக நடத்தப்பட்டது.




செய்தியாளராக சகோ. **சாம்சன்பால்** (ஜீவ நீரோடை) சகோ.**ஜான் லீ** (இந்திய நற்செய்தி மாணவர் மன்றம்) இவர்களோடு நானும் கடைசி 2 நாட்கள் வாலிபர்களுக்கான செய்திகளை பகிர்ந்துக் கொண்டேன்.



சகோ.**டேனியேல் ராஜகுமார்** (ஆவடி) அவர்களுடன் சில ஆவிக்குரிய சகோதரர்கள் சிலரும் தங்கள் குடும்பத்தோடு இணைந்து மிகச் சிறப்பாக 3 நாட்கள் கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்தனர். நாடகம், சாட்சி, படக்காட்சி இப்படி பல நல்ல ஏற்பாடுகளை வாலிப பிள்ளைகளுக்காக ஏற்பாடு செய்திருந்தனர். இதில் சிறப்பு என்னவென்றால் எல்லாரும் CSI சபையை சார்ந்தவர்களாக இருந்தாலும் கூட்ட ஏற்பாடு செய்த யாரும் முழுநேர ஊழியர்கள் அல்ல. பற்பல வேலையில் பணி செய்துகொண்டே ஆவிக்குரிய நண்பர்களான இவர்கள் ஒன்றிணைந்து அவரவர்கள் தங்கள் வருமானத்திலிருந்து மாதா மாதம் சில லட்ச ரூபாய்கள் சேர்த்து குடும்பங்களாய் இணைந்து பல சபைகளில் உள்ள வாலிபர்களை சந்தித்து அழைப்பு கொடுத்து இந்த சிறப்பு ஏற்பாடுகளை வருடா வருடம் நிறைவேற்றி வருகிறார்கள். அவர்களின் பாரமே **வாலிபர்கள் இயேசுவை சந்திக்கவேண்டும்** என்பதாகும். **ஒரு வருடம் முழுவதும்** இவர்கள் தங்கள் **வருமானத்திலிருந்து** கொஞ்சகொஞ்சமாக சில சில லட்சங்கள் சேர்த்து கூட்டத்தில் கலந்துக்கொள்ளும் பிள்ளைகள் வசதியாக தங்கி நல்ல தரமான சாப்பாட்டை உண்டு 3 நாட்கள் கர்த்தரின் செய்தி கேட்க அருமையான ஏற்பாட்டை செய்ததை கண்டு தேவனை துதிக்கிறேன்.

வேறு யாரிடமும் இவர்கள் காணிக்கை கேட்காமல் ஆவிக்குரிய குடும்பங்களாக ஒன்று சேர்த்து இப்படிப்பட்ட கூட்டங்கள் நடத்துவமு மிகச் சிறப்பான செயலாகும். இக்கூட்டங்களில் கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது.



**குறிப்பு:** மெயின்லைன் சபைகள் சிஎஸ்ஐ, லூத்தரன்,ECI மற்றும் பெந்தேகோஸ்தே சபைகள் நம் வாலிபப்பிள்ளைகளுக்கு இப்படிப்பட்ட நல்ல ஆவிக்குரிய கூட்டங்கள் நடத்தும் என்று எதிர்ப்பார்க்க வேண்டாம். ஒரு சில சபைகள் இப்படிப்பட்ட கூட்டங்கள் நடத்துகிறார்கள். ஆனால் அதில் பிரசங்கத்துக்கு அழைக்கப்படும் செய்தியாளர்கள் வாலிப பிள்ளைகளுக்கேற்ற செய்திகளை அறிவிக்கும் தாலந்து பெற்றவர்களாக இருப்பதில்லை. ஏதோ கெட்டுகெதர்போல நடத்திவிட்டு போகிறார்கள். பெந்தேகோஸ்தே சபையினரோ வாலிப பிள்ளைகளை பரவச அனுபவத்தில் ஆழ்த்தி சந்தோஷப்படுத்தி அதுதான் ஆவியின் அபிஷேகம் என்று நம்பவைத்து அனுப்பிவிடுகிறார்கள். அவர்களுக்கும் வாலிப பிள்ளைகளை வழிநடத்த தெரியவில்லை. ஆகவே இரட்சிப்பின் அனுபவம் பெற்ற நபர்கள் குடும்பங்கள் ஒன்றிணைந்து இப்படிப்பட்ட ஏற்பாடுகளை செய்து நம் பிற்கால சந்ததிகளான வாலிபர்களை கர்த்தருக்கென்று ஆதாயம் செய்வோம்.

**சபை மக்களுக்கு உயிற்மீட்சி கூட்டம்:** அடுத்ததாக மேலே குறிப்பிட்டதைப்போல சபைமக்களை வேத வசனத்துக்கு நேராக திருப்பி வசனத்தின்படி வாழ இரட்சிப்பின் அனுபவம்பெற சபை ஆயர்களால்,பிஷப்மார்களால் சரியான நடவடிக்கை எடுக்கமுடியவில்லை. சரியான பிரசங்கிமார்களை ஒரு சில ஆயர்கள்மட்டும்தான் தெரிந்தெடுத்து அவர்களை சபையில் பயன்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் கேரளாவில் மலபார் டையோசிஸ்ஸில் **கொடக்கல்** என்ற ஊரில் சிஎஸ்ஐ சபையில்உள்ள **Senior Friends fellowship** சபையில் வயதில் மூத்தவர்கள் ஆவிக்குரிய நண்பர்களின் ஐக்கியம் என்ற பெயரில் அடிக்கடி ஒன்றுகூடி ஜெபிக்கிறார்கள். அவர்கள் ஒன்று சபை காணிக்கையை எடுக்காமல் அரவரவர்கள் தங்கள் குடும்பத்தினரிடம்,உறவினரிடம் விவரம் கூறி பணம் சேர்த்து இந்தியாவில் நல்ல செய்தியாளர்களை அவ்வப்போது அழைத்து சபை வளாகத்தில் அல்லது மண்டபத்தில் ஆயர் தலைமையில் கூட்டங்கள் நடத்துகிறார்கள். சபைமக்கள் உயிர்மீட்சியடைகின்றனர். அப்படிப்பட்ட ஒரு கூட்டத்தில்தான் நான் நவம்பர் மாதம் பிரசங்கம் செய்துவந்தேன். இப்படிப்பட்ட நல்ல ஏற்பாடுகளை வாலிபர்களுக்கும், சபை மக்களுக்கும் உயிர்மீட்சி உண்டாக இதை வாசிக்கிறவர்களும், இந்த ஏற்பாட்டை பின்பற்றி செயல்படுத்தலாமே!. ஆடம்பர விளம்பரம் இல்லாமல் சாதாரணமுறையில் அறிவிப்புகளை அனைத்து சபைகளிலும், அனைத்து முக்கிய இடங்களிலும் விளம்பரப்படுத்தி ஏற்பாடு செய்யலாமே. இதில் பங்கு கொண்டவர்களெல்லாம் ஆசீர்வதிப்பார்.

# கேரளா கோட்டயம் பிஷப் கைது செய்யப்பட்டார்:



கேரளாவில் கத்தோலிக்க சபை கன்னியாஸ்தீரி ஒருவரை பலமுறை பாலியல் வன்புணர்ச்சி தொல்லை கொடுத்த பிஷப் ஒருவர் சமீபத்தில் கைது செய்யப்பட்டார். கத்தோலிக்க சபையில் பிஷப் ஒருவர் கைதாகி ஜெயில்தண்டனை அனுபவிப்பது இதுதான் முதல்முறையாகும். மற்ற கிறிஸ்தவ சபைகளின் பிஷப்மார் சிலர் ஏற்கனவே கைதாகி ஜெயில் தண்டனை அனுபவித்து பதவியும் பறிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம்.

ஆனால் இந்தியாவில்(பஞ்சாப் மாநிலம்) **ஜலந்தர்** என்ற ஊரில் **பிஷப்.பிராங்கோ மூலக்கல்** மறை மாவட்ட பேராயராக அவர்கள் பணியாற்றினார். இவர் கேரளாவில் கோட்டயத்தில்(குருவிளங்காடு)என்ற ஊரில்உள்ள தேவலாயத்தில் பணியாற்றிய போது அதே தேவலாயத்தில் சேவை செய்த கன்னியாஸ்தீரி ஒருவரை அடிக்கடி பாலியல் வன்புணர்ச்சி செய்துள்ளார். செக்ஸ்டார்ச்சர் செய்யப்பட்டதை தாங்கமுடியாமல் அவர் போலீஸ்ஸில் புகார் கொடுத்தார். அது தொடர்பாக பிஷப் அவர்கள் பலமுறை போலீஸ் அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டார். பிஷப் தன் பதவி அதிகாரத்தை வைத்து கன்னியாஸ்தீரிகளை தன் காமஉணர்ச்சிகளை தீர்த்துக்கொண்டார். கன்னியாஸ்தீரிகளும் அதிகாரத்துக்கு பயந்து தாங்கள் அனுபவிக்கும் செக்ஸ்டார்ச்களை வெளியில் சொல்லாமல் இருந்தனர். டார்சர் எல்லை மீறிப்போன உடன்தான் போலீஸ்ஸில் புகார் கொடுத்தார் என்று கூறப்படுகிறது. விசாரணையில் பிஷப்பின் இந்த பாவ செயல் உண்மைதான் என்பதற்கு சாட்சியாக இந்த பிஷப்பின் கீழ் ஆயராக பணியாற்றும் பாதர்.**குரியாகோஸ் கட்டுதரா** என்பவர் இந்த வழக்குக்கு முக்கிய சாட்சியாக விசாரணையில் விவரத்தை நீதிமன்றத்தில் கூறினார். பாவம்செய்த **பிஷப்** அவர்கள் கைதுசெய்யப்பட்டு இப்போது ஜாமீனில் வெளிவந்துள்ளார்.

**கொலை மிரட்டல்:** முக்கிய பிரதான சாட்சியான **Fr.குரியாகோஸ்** அவர்கள் இப்போது சாட்சி கூறாமல் இருக்க பல விதத்தில்அவருக்கு பலமுறை பயமுறுத்தல் வந்தன. ஆனால் தான் கூறும் சாட்சியில் **Fr.**குரியாகோஸ் மிரட்டலுக்கு பயப்படாமல் உறுதியாக இருந்தார் என்பதை அறிந்து கொலை மிரட்டல்களும் தொடர்ந்து வந்துக்கொண்டேயிருந்தது. இவ்விவரத்தை அப்போதே அவர் போலீஸ்க்கு அறிவித்திருந்தார். **பிரதான சாட்சியான Fr.குரியாகோஸ் திடீர் மரணம்: Fr.**குரியாகோஸ் கொலை மிரட்டலை நீதிமன்றத்துக்கு அறிவித்ததைப்போல் 2018 அக்டோபர் 19ம் தேதி குரியாகோஸ் அவர்கள் தேவலாயத்தில்உள்ள தன் அறையில் இறந்தநிலையில் இருந்தார். போலீஸ் DSP.ஷர்மா கூறுகையில் பாதிரியார் அறையை உடைத்து திறந்தபோது பாதர் அவர்கள் படுக்கையில் வாந்தி எடுத்த நிலையில் கிடந்தார். அருகில் இரத்த அழுத்தித்திற்கான மாத்திரைகள் இருந்ததை கண்டெடுத்தோம் என்றார். மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகிறோம் என்று அறிவித்தார். மரித்த பாதிரியாரின் உறவினர்கள் பாதிரியார் மரணத்தில் சந்தேகம் உண்டு. பிஷப்புக்கு எதிரான அவர் பிரதான சாட்சியாக இருந்ததால் அவர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. கத்தோலிக்க சபையில் இதுமாதிரி செக்ஸ்டார்ச்ர்களும், கொலைகளும் உலகின் பல்வேறு இடங்களில் சர்வசாதராணமாக நடக்கிறது. ஆனால் அது வெளிவருவதில்லை. காரணம் இவர்கள் யாரும் திருமணம் செய்வதில்லை. அதுமட்டுமல்ல, இவர்களுக்கு கொடுக்கப்படும் ஆகாரம் விலைக்கூடிய ஆகாரம் ஆகும். அதனால்தான் சாப்பிடும் சாப்பாட்டுக்கு - சரீர தீனிக்காக அலைகிறார்கள்.



## (UAE) SHARJAH CSI CHURCH கன்வென்ஷன் கூட்டங்கள்:

நாடு : ஷார்ஜா - SHARJAH- CSI TAMIL CHURCH
நாள் : 2019 ஏப்ரல் 9,10 மற்றும் 11 (புதன்,வியாழன்,வெள்ளி)
நேரம் : மாலை 6 மணி முதல்
பிரசங்கம் : **டாக்டர்.புஷ்பராஜ்** (ஜாமக்காரன் ஆசிரியர்)

குறிப்பு: தனி ஜெபத்துக்கும், ஆலோசனைக்கும் கூட்ட விவரங்கள் அறிய தொடர்புக்கொள்ள:

**Rev.R.RANJIT SUTHIR**
**(Presbyter & President)**
**Mob:050 936 7576)**

**Mr.ARUNKUMAR**
**(Church Secretary)**
**(Mob:0097 150 6385746)**

(மலையாள சபை மக்கள் என்னை தனியாக சந்திக்க நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது)

NOVEMBER 2018

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.